# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,561—1965 නොවැම්බර් 19 වැනි සිකුරාදා—1965.11.19

14,561 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யக்கூடியதாக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 587 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 585 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் . .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

இத்தால் பொதுமக்களின் கவனத்திற்கு, ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சட்டத்தில் (அத்தியாயம் 260) ன் கீழ் முறையே பிரிவு 3(9)ம் 3 (2) ம் பகுதிகளின்படி கௌரவ காணி, நீர்ப்பாய்ச்சல், மின்சார, மந்திரியார், திருவாளர் டி. டப். ஆர். ககவிற்ற அவர்களை

(அ) 1965 செப்டம்பர் 1 ம் திகதி தொடக்கம் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபைத் தலைவருக்காக கடமையாற்றுவதற்கும்

(ஆ) 1965 நவம்பர் 1 ம் திகதி தொடக்கம் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்

என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எம். ஸ்ரீகாந்தா,
நிரந்தரக்காரியதரிசி,
காணி, நீர்ப்பாய்ச்சல், மின்சார மந்திரி காரியாலயம்.

கொழும்பு,
1965 ம் ஆடு நவம்பர் மீ 2 ந் உ.

11-469/1

---

இத்தால் பொதுமக்களின் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்வது யாதெனில், ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சட்டம் (அத்தியாயம் 260) ன் கீழ் பிரிவுகள் 3(9) ம், 3 (1) ன் கீழ் திருவாளர் சீ. ஆர். கருணாரத்னவை

(அ) 1965 செப்டம்பர் 1 ம் திகதி தொடக்கம் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபை உத்தியோகப்பற்றுள்ள சபை அங்கத்தவருக்காக கடமையாற்றும்படியும்,

(ஆ) 1965 நவம்பர் 1 ம் திகதி தொடக்கம் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபை உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவராகவும் நியமித்துள்ளாரென்பதை இத்தால் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

எம். ஸ்ரீகாந்தா,
நிரந்தரக்காரியதரிசி,
காணி, நீர்ப்பாய்ச்சல், மின்சார மந்திரி காரியாலயம்.

கொழும்பு,
1965 ம் ஆடு நவம்பர் மீ 2 ந் உ.

11-469/2

---

இத்தால் பொதுமக்களின் கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்வது யாதெனில், ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபைச் சட்டம் (அத்தியாயம் 260) ன் கீழ் பிரிவு 3(1) ன்படி திருவாளர் விக்டர் ரத்னாயக்காவை உத்தியோகப்பற்றுள்ள ஒரு அங்கத்தவராக 1965 செப்டம்பர் 1 ம் திகதி தொடக்கம் கௌரவ காணி, நீர்ப்பாய்ச்சல், மின்சார மந்திரியாரால் நியமிக்கப்பட்டுள்ளாரென்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எம். ஸ்ரீகாந்தா,
நிரந்தரக்காரியதரிசி,
காணி, நீர்ப்பாய்ச்சல், மின்சார மந்திரி காரியாலயம்.

கொழும்பு,
1965 ம் ஆடு நவம்பர் மீ 2 ந் உ.

11-469/3

---

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

லாம்பு மன்றில்கள் சம்பந்தமாக (நானாவித பொருள்கள்) விலைக் கட்டுப்பாட்டதிகாரியாலாக்கப்பட்டு 1965 ம் ஆண்டு ஒக்டோபர் 21ம் தேதிய 14,538 ம் இலக்க அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை வர்த்தக, வியாபார அமைச்சர் அங்கீகரித்துள்ளாரென (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4(7) ம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டி. ரி. ஈ. ஏ. டி பொன்சேகா,
நிரந்தரச் செயலாளர்,
வர்த்தக, வியாபார அமைச்சு.

கொழும்பு,
1965 ம் ஆடு நவம்பர் மீ 11 ந் உ.

11-768

## சம்பளச் சபைச் சட்டம்

### அறிவித்தல்

அச்சடிப்புத் தொழிற் சம்பளச் சபையில், 1965 ம் ஆண்டு மே மாதம் 17 ந் தேதி தொடக்கம் மூன்று ஆண்டு காலத்திற்கு அங்கம் வகித்தற்கு, பின்வரும் பேர்வழிகளை (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம் கனம் தொழில், தொழில் வசதி, வீடமைப்பு மந்திரி மகிழ்ச்சியுடன நியமித்துள்ளாரென்று, 1943 ம் ஆண்டுச் சம்பளச் சபை ஒழுங்குவிதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அ. ஓ. வீரசிங்க,
தொழில், தொழில்வசதி, வீடமைப்பு மந்திரி
காரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 4 ந் உ.

நியமன அங்கத்தவர்கள்

1. திரு. பர்னுட் டி சில்வா
2. திரு. ஜீ. சி. நாணயக்கார
3. திரு. எம். எம். நலீம்.

முதலாளிகளின் பிரதிநிதிகள்

1. திரு. எல். ஈ. வீரசேகர
2. திரு. எச். டபிள்யு. மூர்
3. திரு. சி. எம். எப். ஜெனிங்ஸ்
4. திரு. ஆர். வி. ஹிண்டன்
5. திரு. பீலிக்ஸ் ஆர். டி சொய்சா
6. திரு. ஈ. ஏ. டி சில்வா
7. திரு. ஜீ. பி. எஸ். கோமஸ்
8. திரு. பி. சி. விஜேமான
9. திரு. பிரான்சிஸ் குணரத்ன

தொழிலாளரின் பிரதிநிதிகள்

1. திரு. திலக குலசேகர
2. திரு. டீ. ஜே. ஜே. ரணசிங்க
3. திரு. ஜே. எம். ஞானதாச
4. திரு. எச். சீ. வெடிவர்தன
5. திரு. ஹென்றி விதானச்சி
6. திரு. டபிள்யூ. பீ. த மெல்
7. திரு. சீ. எம். டானியல்
8. திரு. என். சண்முகதாசன்
9. திரு. டீ. ஏ. சேதுங்க

11-589

## சம்பளச் சபைச் சட்டம்

### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில், தொழில்வசதி, வீடமைப்பு மந்திரி பின்வரும் பேர்வழிகளை, 1965 ம் ஆண்டு மே மாதம் 17 ம் தேதி தொடக்கம் 3 ஆண்டு காலத்திற்கு இயந்திரத்தொழிற் சம்பளச் சபையில் அங்கம் வகித்தற்கு, மகிழ்ச்சியுடன நியமித்துள்ளாரென்று, 1943 ம் ஆண்டுச் சம்பளச் சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஏ. ஓ. வீரசிங்க,
தொழில், தொழில்வசதி, வீடமைப்பு மந்திரி
காரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1965 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ந் திகதி.

நியமன அங்கத்தவர்கள்

1. திரு. ரி. சிவப்பிரகாசபிள்ளை
2. திரு. பி. சங்கரப்பிள்ளை
3. திரு. ஏ. ஆர். த சில்வா

முதலாளிகளின் பிரதிநிதிகள்

1. திரு. எல். ஈ. வீரசேகர
2. திரு. ஏ. மக்னெல் வில்சன்
3. திரு. ஜி. கே. உவாலிஸ்
4. திரு. ஈ. வணிகசேகர
5. திரு. ரி. தவராசன்
6. திரு. அயன். ஈ. அமரசிங்க
7. திரு. வி. ரி. செல்லத்துரை
8. திரு. எஸ். ஏ. ஸ்காணிவல்
9. திரு. வட்லி த சில்வா

தொழிலாளரின் பிரதிநிதிகள்

1. திரு. திலக குலசேகர
2. திரு. டபிள்யு. எட்வாட்
3. திரு. ஆர். ஆர். ஜேமிஸ் பர்ணாந்து
4. திரு. ஆர். வீரக்கூன
5. திரு. எஸ். ஏ. டபிளயு. சில்வா
6. திரு. என். சண்முகதாசன்
7. திரு. எச். பி. ஆரியதாச
8. திரு. எச். சீ. வெடிவாதன
9. திரு. ஜீ. லங்கா பெரேரா

11-710

## விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

(2 ம் அத்தியாயம் ஆகிய) பொருள்கோடற் கட்டளைச் சட்டத்தின் 12 ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் (173 ம் அத்தியாயம் ஆகிய) விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ், வர்த்தக, வியாபார அமைச்சர், இதற்குள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளோரை, 1965 ம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ம் தேதி தொடக்கம் தீவு முழுவதற்கும் அவர்தம் கடமைகளுடன (நானுவித பொருள்கள்) உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளாக நியமித்துள்ளார்.

டி. ரி. ஈ. ஏ. டி பொன்சேகா,
நிரந்தரச் செயலாளர்,
வர்த்தக, வியாபார அமைச்சு.

கொழும்பு, 11.11.1965.

### அட்டவணை

சமூக சேவைப் பகுதியின் சகல பரிபாலன உதவியாளர்கள்.
சகல சநதைபபடுத்தல் அபிவிருத்தி உதவி அதிகாரிகள்.
கூட்டுறவு இயக்கத்தின சகல உதவி ஆணையாளர்கள்.
சகல உதவி அரசாங்க அதிபர்கள.
சகல மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள்.
சகல மாவட்ட காணி உத்தியோகத்தாகள்.
சகல பெரும்பாக சநதைப்படுத்தல உத்தியோகத்தர்கள்.
கிராம அபிவிருத்தி, சிறுகைத்தொழில் பகுதியின் சகல மாவட்ட உத்தியோகத்தர்கள.
சகல பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்கள்.
அரசாங்க கட்டடவேலைப் பகுதியின சகல நிறைவேற்று இஞ்சினியர்கள்.
கச்சேரிகளின் சகல மேலதிக கநதோர் உதவியாளர்கள்.
சகல காணி உத்தியோகத்தர்கள்.
சகல வைத்திய உத்தியோகத்தர்கள்.
கச்சேரிகளின் சகல கநதோர் உதவியாளர்கள்.
சகல சுகாதார சேவை அத்தியட்சர்கள்.

11-767

## சம்பளச் சபைச் சட்டம்

### அறிவித்தல்

தீப்பெட்டி உற்பத்தித் தொழிற் சம்பளச் சபையில் 1964 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 8 ந் திகதி தொடககம மூன்று ஆண்டு காலத்திறகு அங்கம் வகிக்கப் பின்வரும் பேர்வழிகளை (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின 9 ம் பிரிவின பிரகாரம் கனம் தொழில், தொழில் வசதி வீடமைப்பு மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென்று 1943 ம் ஆண்டுச் சம்பளச் சபை 26 ம் விதிகளின பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. ஓ. வீரசிங்க,
தொழில், தொழில் வசதி, வீடமைப்பு மந்திரி
காரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1965 ம் ஆண்டு நவெம்பர் மீ 12 ந் உ.

நியமன அங்கத்தவர்கள்

1. முகாந்திரம் டபிளயு பீ. எல்லிறறிகல, சமாதான நீதிபதி
2. திரு. வீ. எஃ. குணரத்ன
3. திரு. எம். எஃப். ஏ. ஜாவாட்

முதலாளிகளின் பிரதிநிதிகள

1. திரு. எச். ஈ. பி. த மெல்
2. திரு. பீ. ஹல்லெரோம்
3. திரு. ஏ. எச். சீ. அபேவாதன
4. திரு. எல். ஈ. வீரசேகர
5. திரு. என. யூ. ஸ்ரெனபெக்

தொழிலாளரின் பிரதிநிதிகள

1. திரு. டொறிக த சூசா
2. திரு. ஏ. கே. கருணாபால
3. திரு. என். சண்முகதாசன்
4. திரு. வாற்சன் பர்ணாந்து
5. திரு. மெரில் பர்ணாநது.

11-709

# அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள்

5.11.65 ம் தேதிய 14,550 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானி (அதி விசேடமானது) யின் பிரகாரம் கீழ்வரும் விண்ணப்பங்களின் முடிவு தேதி 30.11.1965 வரை நீடிக்கப்பட்டுள்ளது :—

(1) பதிவிற்கான விண்ணப்பம்—பத்திரம் "ஏ" (3 ம் இலக்க அறிவித்தலின் கீழ்).

(2) மூலப் பொருட்கள் இறக்குமதி செய்வதற்கான விண்ணப்பங்கள—பத்திரம் "பி" (4 ம் இலக்க அறிவித்தலின் கீழ்).

(3) தீர்க்கப்படாத விண்ணப்பங்கள்—பத்திரம் "டி" (6 ம் இலக்க அறிவித்தலின் கீழ்).

(4) மூலப் பொருட்களின் மார்க முறைப்படி பாகுபடுத்தல்—பத்திரம் "பி" (7 ம் இலக்க அறிவித்தலின் கீழ்).

ஆர். சி. டி. சில்வா,
அபிவிருத்தி அதிபர்.

11-729

## 1966 ம் ஆண்டுக்குத் துப்பாக்கி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல்—புத்தள மாவட்டம்

1965 ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ந் திகதியிலிருந்து புத்தளம் மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட துப்பாக்கிகளை 1966 ம் ஆண்டிற்குப் புதுப்பித்தல் இம் மாவட்டத்தில் உள்ள பிரிவுக் காரியாதிகாரிகளினுல் செய்யப்படும். ஆகவே புதுப்பித்தல் சம்பந்தமான சகல விண்ணப்பங்களும் அந்தந்தப் பிரிவுக்காரியாதிகாரிகளுக்கே அனுப்பப்படல் வேண்டும். 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ந் திகதிக்குள் அனுமதிப்பத்திரங்கள் யாவும் புதுப்பிக்கப்படல் வேண்டும். 1966 ம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் பெறுவோர் 1965 ம் ஆண்டிற்கான தமது அனுமதிப்பத்திரத்தையும் துப்பாக்கியையும் பரிசோதனைக்காக எனக்காகக் கடமையாற்றும் உத்தியோகத்தருக்கு 1966 ம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் பெறுமுன் காண்பித்தல் வேண்டும். 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ந் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் அனுமதிக்கப்பட்டால், அவற்றிற்கு, அனுமதிப் பத்திரக் கட்டணத்திற்குச் சமமான அபராதமும் விதிக்கப்படும்.

2. பாவிக்கமுடியாத துப்பாக்கிகளை வைத்திருப்பவர்களும் 1966 ம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெருதவர்களும், துப்பாக்கிகளை அவற்றின் அனுமதிப்பத்திரத்துடன் பிரிவுக் காரியாதிகாரியிடமோ அல்லது எனது கந்தோரிலோ 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ந் திகதிக்குள் ஒப்படைத்தல் வேண்டும்.

3. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ந் திகதிக்குள் அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிக்கத் தவறினுல் அவர்கள்மீது வழக்குத் தொடரப்படும்.

அஹமது இஸ்மாயில் மொஹிதீன்,
புத்தளம் அரசாங்க அதிபர்.

கச்சேரி, புத்தளம்,
1965 ம் ஆண்டு நவம்பர் மாதம் 5 திகதி.

11–594

## திருகோணமலே மாவட்டம்

### துப்பாக்கி அனுமதிப்பத்திரங்கள் புதுப்பித்தல்—1966

1965 ஆம் ஆண்டு (டிசம்பர்) மார்கழி மாதம் முதலாந் திகதியிலிருந்து 1966 ஆம் வருட துப்பாக்கி அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படும். துப்பாக்கியின் சொந்தக்காரர்கள் தாங்கள் வசிக்கும் பிரிவுக் காரியாதிகாரிக்கு மனுச் செய்தல் வேண்டும். திருகோணமலே எல்லைக்குள் வசிக்கும் துப்பாக்கியுடையவர்கள் திருகோணமலே பிரிவுக்காரியாதிகாரிக்கு மனுச் செய்தல் வேண்டும். திருகோணமலே மாவட்டத்திலுள்ள காரியாதிகாரிகளின் விலாசம் பின்வருமாறு :—

(1) பிரிவுக் காரியாதிகாரி, திருகோணமலே

(2) பிரிவுக் காரியாதிகாரி, கொட்டியாபுரப்பற்று, மூதூர்

(3) பிரிவுக் காரியாதிகாரி, கிண்ணியா

(4) பிரிவுக் காரியாதிகாரி, கந்தளாய்

(5) பிரிவுக் காரியாதிகாரி, கட்டுக்குளம்பத்து (கிழக்கு), குச்சவெளி

(6) பிரிவுக் காரியாதிகாரி, கட்டுக்குளம்பத்து (மேற்கு), கோமரங்கடவல

துப்பாக்கி அனுமதிப்பத்திரக் கட்டணத்துக்காக முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அனுமதிப் பத்திரங்கள் காணுது போயிருந்தால் புதுப்பிக்கும் காலத்திற்கு முன் திருகோணமலே அரசாங்க அதிபரிடமிருந்து ஒரு ரூபாய் செலுத்தி சாத்திரைப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும். பழைய அனுமதிப் பத்திரங்கள் அல்லது காணுமல் போனதற்குரிய சாத்திரைப் பத்திரம் காட்டாவிடில் அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட மாட்டாது. 1965 ஆம் வருட (டிசம்பர்) மார்கழி மாதம் 31 ந் திகதிக்குமுன் தங்களுடைய அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிக்காதவர்கள் அனுமதிப் பத்திரக் கட்டணத்திற்கு சமமான அபராதத்திற்கு ஆளாவார்கள்.

1966 ஆம் வருட (மார்ச்) பங்குனி மாதம் 31 ந் திகதிவரை இந்த அபராதத்தை அறவிட்டுக்கொண்டு பிரிவுக் காரியாதிகாரிகளால் அனுமதிப் பத்திரங்கள் புதுப்பித்துக் கொடுக்கப்படும். அதனபின் திருகோணமலே கச்சேரியில் அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படும். 1966 ம் வருட (மார்ச்) பங்குனி மாதம் 31 ந் திகதிக்குமுன் தங்கள் அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்கத் தவறியவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்.

ஒரு துப்பாக்கி பாவிக்க முடியாத நிலைமையிலிருந்தால் அத்துப்பாக்கியை 1965 ம் வருட அனுமதிப் பத்திரத்துடன் நேர் முகமாகவோ அல்லது கிராமசேவகர் மூலம் (கையேற்றுக் கொள்பவரிடமிருந்து பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்) கச்சேரியில் அல்லது பொலிஸில் 1965 ம் வருட (டிசம்பர்) மார்கழி மாதம் 31 ந் திகதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும். அல்லாத வகையில் அனுமதிப் பத்திரக்காரர் 1966 ம் ஆண்டிற்கான வழக்கமான கட்டுப்பணம் செலுத்தி அனுமதிப் பத்திரம் எடுக்கவேண்டும்.

எம். பி. சேனநாயக்க,
அரசாங்க அதிபர், திருகோணமலே.

திருகோணமலேக் கச்சேரி,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 10 ம் திகதி.

11–634

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலே நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனே ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.